**Previous Examination date –17.06.2014**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 346/2012**

**Deposition of Witness P. W . 6**

| | |
|---|---|
| **Name : டால்ஸ்டாய்** | **Father/Husband's Name:** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.04.2022**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் அரசு மருத்துவமனை பழனியில் முதன்மை குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.04.2012 அன்று இரவு 10.40 மணியளவில் நான் பணியில் இருந்தபோது 18 வயதுடைய கார்த்திக் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்கள் இரவு 07.30 மணியளவில் தன் வீட்டு அருகில் தன்னை தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1. இடது கை முழங்கை அருகில் பற்கள் பதிந்த தழும்பு காணப்பட்டது. 2. இரத்தக்கட்டு காயம் 2x2 செ.மீ அளவில் இடது கை முழங்கைக்கு கீழே காணப்பட்டது. இவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இவருக்கு ஏற்பட்ட காயம் 1,2 சாதாரண காயம் என சான்று அளிக்கிறேன். விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குடிபோதையில் இருக்கும் ஒரு நபரை கைத்தாங்கலாக அழைத்து வரும்போது தடுமாறி கீழே விழுந்தால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் காயம் 2 ஏற்பட வாய்ப்பு உள்ளது. காயம் 1 ஆனது பற்கள் பதிந்திருந்ததால் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பில்லை. பற்களால் ஏற்பட்ட காயமானதுயாரால் ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான்.

L RAGUPATHIRAJA Digitally signed by L RAGUPATHIRAJA Date: 2022.04.06 18:08:55 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**